1982 மார்ச் 5]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவர் அவர்களே, பதிலிலேயே சொல்லியிருக்கிறேன். 19 ஆண்டு காலம் எடுத்துப் பார்த்ததில் கூட ஆண்டு ஒன்றுக்கு 1.24 சதவிகிதம் தான் அந்தக் கொள்ளளவு பாதிக்கப்படுகிற அளவிற்கு வண்டல் மண் வந்து கொண்டு இருக்கிறது. ஆகவே, அது அணைத் திட்டத்தை இதுவரையில் பாதிக்கவில்லை. பாதகம் ஆகும் சூழ்நிலை வருகிறபோது, ஏற்கனவே மாண்புமிகு ஏ. சி. சண்முகம் அவர்கள் கேட்டபோது தெரிவித்தது போல், விவசாயிகள் அந்த வண்டல் மண் தேவைப்படுகிறது என்று சொன்னாலும் எடுத்துக் கொள்ள அனுமதிக்கலாம். அல்லது ஓரளவு கொள்ளளவை பாதிக்கும் அளவிற்கு அந்த வண்டல் மண் இருக்குமானால், அதை அரசே வெளியே எடுப்பதற்கு முயற்சிக்கலாம்.

வீராணம் ஏரி வடிகால் வாய்க்காலில் பருவ மழைக் காலங்களில் ஏற்படும் வெள்ளம்.

* வினா எண் 378.—திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தென்னார்க்காடு மாவட்டம் வீராணம் ஏரியிலிருந்து வடிகால் வாய்க்காலில் (வாலாஜா வாய்க்கால்) பருவ மழை காலங்களில் வெள்ளம் வந்து பயிர்களையும், குடிசைகளையும் சேதப்படுத்துவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) 1977 மற்றும் 1979 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ளங்களால் இப்பகுதிகளில் பயிர் சேதம் ஏற்பட்டது.

(ஆ) உடனடியாக நிவாரணம் அளிக்க 1977 ஆம் ஆண்டில் ரூ. 5.26 இலட்சம் செலவிலும், 1979 ஆம் ஆண்டில் ரூபாய் 2.74 இலட்சம் செலவிலும், வெள்ளத் தடுப்புப் பணிகள் நிறைவேற்றப்பட்டன. இப்பகுதிகளுக்கு வெள்ளத்திலிருந்து நிரந்தரமான பாதுகாப்பு அளிப்பதற்கான திட்டம் ஆய்வில் உள்ளது.

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1977 ஆம் ஆண்டிலும், 1979 ஆம் ஆண்டிலும் அந்த வாய்க்கால்கள் செப்பனிடப்பட்டன என்று

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால் நான் கேட்பது வீராணம் ஏரியில் இருந்து வாலாஜா ஏரிக்கு ஒரு வாய்க்கால் மூலமாக வரும் நீரால் அந்தப் பகுதியில் உள்ள நிலங்கள்—குறிப்பாக நெய்வேலிக்குப் பக்கத்தில் இருந்து வரும் தண்ணீரால்—குறிப்பாக 10 கிராமங்களில்—பாதிக்கப்பட்டு இருக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் அந்த கிராமத்தில் உள்ள ஜனங்கள் இந்த வெள்ளக் காலங்களில் இடம் மாற்றம் செய்யவேண்டி இருக்கிறது. ஆகவே, அதைத் தடுப்பதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா, அந்த வாய்க்காலை நல்ல முறையில் சீரமைக்க முன்வருமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் இருக்கும் நிலங்களுக்கு நிரந்தர நிவாரணம் அளிக்க வேண்டும் என்ற அடிப்படையில் சேத்தியாத்தோப்பு அணையில் இருந்து கடல் வரையில் வெள்ளாற்றுக்கு ரூ. 260.50 லட்சம் செலவில் கரைகள் அமைக்க தலைமைப் பொறியாளர் ஒரு கருத்துருவை அரசுக்கு அனுப்பியுள்ளார். மேலும், கீழ்கொள்ளிட அணைத் திட்டத்தின் கீழ் வரும் ஆறுகள், கால்வாய்கள் நவீனப்படுத்தும் திட்டத்திற்கு 80 லட்ச ரூபாய் செலவில் வடிகால் அமைக்கச் செய்யும் திட்டத்தையும் சேர்த்து தலைமைப் பொறியாளர் அனுப்பியுள்ளார். குறிப்பாக இந்த வாலாஜா ஏரிக்கு வரக்கூடிய வெள்ளாறு ராஜன் கால்வாயை நாம் ஏற்கனவே இரண்டு முறை சீர்செய்து இருக்கிறோம். அது போக வேறு ஏதாவது பகுதியில் வெள்ளத் தடுப்பு பாதுகாக்கப்பட வேண்டும் என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் அதைக் குறிப்பிட்டுச் சொன்னால், அது குறித்து உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வாலாஜா ஏரியில் இருந்து வருகின்ற சர்ப்ளஸ் வாட்டர் பெருமாள் ஏரிக்கு வருகிறது. அந்தப் பெருமாள் ஏரிக்கு செல்கிற வாய்க்காலின் இரு பக்கமும் புதிய கரை பெருமாள் ஏரி வரை வாத்தாலுக்கு வட புறமும், தென் புறமும் கிட்டத்தட்ட 10 கிராமங்கள் அவ்வப்போது பாதிக்கப்படுகின்றன. அதைத் தவிர்ப்பதற்காக வருகின்ற நிதி ஆண்டிலாவது இரண்டு பகுதிகளிலும புதிய கரை அமைத்துச் செப்பனிடுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவர் அவர்களே, இது குறித்து அரசு விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.